[1979 மார்ச் 19

துறைமுகம் ஆகியவை இணைக்கப்பட்ட பின்னர், அதன் காரணமாக 2 ஆயிரம் தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலை இழக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்களே, அதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா? அதைப் போக்குவரத்திற்கு நிவாரணம் அளிக்க, ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறைக்கு இந்தக் கேள்வியைப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சியிலே அந்த ஆலையை விஸ்தரித்து பல பொருட்களை உற்பத்தி செய்யும் திட்டம் இருந்ததாகவும், ஆனால் அதற்குப் போதிய மின்சார சக்தி கொடுக்க தமிழ்நாடு அரசு தயாராக இல்லையென்ற காரணத்தால் அந்தத் திட்டம் கேரளத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகக் குறிப்பிடுகிறார்கள், அது உண்மையா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, என்னிடத்திலே தற்போது விவரம் இல்லை.

இலுப்பப்பட்டு நீலகண்டேஸ்வரர் கோயில் பணியாளர்கள்.

* வினா எண் 462 ;—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மாயூரம் ஒன்றியம், மணல்மேட்டைச் சேர்ந்த இலுப்பப்பட்டு அருள்மிகு நீலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் பணியாற்றி வந்த ஊழியர்கள் பலர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : திருவாவடுதுறை ஆதீனத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளது இவ்வாலயம். அதில் பணிபுரிந்த ஏழு ஊழியர்கள் 15-3-1977 முதல் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். அவர்களுள் ஒருவர் 30-6-1977 அன்று இறந்து விட்டார். மீதமுள்ள ஆறு பேர் 1-7-1977 முதல் வேலைக்கு மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பல முறை இந்த மாமன்றத்திலே இத்தகைய பிரச்சினைகள் வரும்பொழுது குறிப்பாக மடங்கள், ஆதீனங்கள் ஆகியவற்றிற்குச் சொந்தமான

1979 மார்ச் 19]

திருக்கோயில்களை அறநிலையத் துறையே மேற்கொண்டால் இத்தகைய சிரமங்கள் வராது என்று எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் மேற்கண்ட கோயிலில் பணியாற்றி நீக்கப்பட்டவர்கள் இனி யாரேனும் சேர்க்கப்படாமல் இருந்தால் அப்படி இருப்பவர்களுக்கு வேலையில் சேர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வார்களா? செய்தி துறையில், நெருக்கடி காலத்திலே வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பை அமைச்சர் அவர்கள் அளித்து இருக்கிறார்கள். அதற்காக நான் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே இதையும் கருதி அமைச்சர் அவர்கள் வேலைவாய்ப்பை இழந்தவர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதற்கு ஆவன செய்யமுன்வருவார்களா?

(முற்பகல் 9.20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்த ஆலயத்தைப் பொறுத்தவரையில் ஏழு பேர் நீக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் துர்ப்பாக்கியவசமாகக் காலமாகிவிட்டார். பாக்கி ஆறு பேர்கள் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள், இதைத் தவிர வேறு எங்கெங்கு அப்படி வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலைத் தந்தால் அதை அரசு நிச்சயமாகப் பரிசீலித்துத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இன்னொரு கேள்வியைப் போட்டிருக்கிறார்கள். இந்த மடங்கள் இவைகளின் நிர்வாகத்திற்குள்ளே இருக்கின்ற ஆலயங்களையெல்லாம் எடுத்துவிட வேண்டுமென்று இத்தனை ஆண்டுக்காலமாக எந்தக் காரணத்தின் அடிப்படையிலே அல்லது வேறு சிக்கல்களின் அடிப்படையிலே அல்லது வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் இது விடப்பட்டிருக்கிறதோ அதுதான் இப்பொழுது தொடர்ந்துகொண்டிருக்கிறது. என்றாலும் அவைகளை இந்த அரசு தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மஞ்சத்தட்டை' பகுதியை சுற்றுலா மையமாக்கல்

* வினா எண் 463—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி பண்குடிக்கு மேற்காக உள்ள மேற்கு மலைத்தொடரிலுள்ள குமரி மாவட்டத்தைச் சார்ந்த மஞ்சத்தட்டை என்ற இடத்தைச் சுற்றுலா மையமாக மாற்றும் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.